# தமிழ்நாடு அரசால் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும் அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வு பயிற்சி-2024

## அறிவிக்கை

தமிழ்நாடு அரசு அகில இந்திய குடிமைப்பணிகள் முதல்நிலைத் தேர்வு எழுதுவோருக்கு பயிற்சி வழங்குவதற்காக சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் பயிற்சி மையங்களை ஏற்படுத்தி, தொடர்ந்து பயிற்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

இந்த பயிற்சி மையங்களில், கோயம்புத்தூர் பயிற்சி மையம், பாரதியார் பல்கலைக் கழகத்தில் அண்ணா நூற்றாண்டு குடிமைப்பணிகள் பயிற்சி மையம் என்ற பெயரில் இயங்கி வருகிறது. இந்த பயிற்சி மையத்தில் சேர நுழைவுத் தேர்வு நடத்தப்பட்டு அதன் மூலம் இனவாரி ஒதுக்கீடு அடிப்படையில் 100 (நூறு மட்டும்) ஆர்வலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வந்தது. தற்போது தமிழ்நாடு அரசு இத்திட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் **"நான் முதல்வன்"** திட்டத்துடன் இணைத்துள்ளது. இந்த திட்டத்தின் கீழ் அகில இந்திய குடிமைப் பணிகளில் ஆர்வம் கொண்டுள்ள 1000 (ஆயிரம் மட்டும்) இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு ஊக்கத் தொகையாக மாதம் ரூ.7500/- (ரூபாய் ஏழாயிரத்து ஐநூறு மட்டும்) வீதம் 10 (பத்து) மாதங்கள் தமிழ்நாடு அரசால் வழங்கப்படவுள்ளது. இதற்கான **மதிப்பீட்டுத்தேர்வு 15.09.2024** அன்று நடத்தப்படவுள்ளது. இந்த மதிப்பீட்டுத் தேர்வின் அடிப்படையில் மட்டுமே பாரதியார் பல்கலைக் கழகத்தில் இயங்கி வரும் அண்ணா நூற்றாண்டு குடிமைப்பணிகள் பயிற்சி மையத்திற்கு 100 (நூறு) ஆர்வலர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். பயிற்சி மையத்தில் சேர்வதற்கு தனியாக நுழைவுத் தேர்வு **ஏதும் நடத்தப்படமாட்டாது.** பட்டப்படிப்பு முடித்தவர்கள் அனைவரும் இந்த தேர்வை எழுதலாம். நிபந்தனைகள் மற்றும் முழுவிவரங்களுக்கு **நான் முதல்வன்** இணைய தளத்தை காணுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மதிப்பீட்டுத் தேர்வுக்கு விண்ணப்பிக்க **கடைசி நாள் 17.08.2024.**

இத்தேர்வுக்கு இணைய வழியில் மட்டுமே விண்ணப்பிக்க இயலும்.

இணைய முகவரி: **https://naanmudhalvan.tn.gov.in/**

**https://nmcep.tndge.org/apply**

ஒருங்கிணைப்பாளர்
அண்ணா நூற்றாண்டு
குடிமைப்பணிகள் பயிற்சி மையம்,
பாரதியார் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர் - 641 046.